# மயிலாடுதுறை நகராட்சி

**2021–ம் ஆண்டு ஜூன் மாதம் – 30 ஆம் தேதி புதன் கிழமை**
**மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு.கா.சுப்பையா.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.06.2021** | 1) மயிலாடுதுறை நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை பகுதி II திட்டத்தில் 2006–07 ஆம் ஆண்டு ரூ 48.00 மதிப்பீட்டுத் தொகையில் மதுரையை சேர்ந்த M/S ஜீவாலா எக்யூப்மெண்ட் கன்சல்டன்சி, என்ற ஒப்பந்த நிறுவனத்தால் கட்டப்பட்டு நகர்மன்ற தீர்மான எண். 321 நாள் 31.01.2011 ன் படி தகன மேடை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு, மதுரை சுற்றுச்சூழல் நலகல்வி மற்றும் மேம்பாட்டு (EHEDT) அறக்கட்டளை மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது.<br>இதன் பின்பு கடந்த சில ஆண்டுகளாக மேற்படி பராமரிப்பு நிறுவனம் நவீன எரிவாயு தகன மேடையை சரிவர பராமரிக்காததால் எரிவாயு தகன மேடை கட்டிட சுற்றுபுறம் மற்றும் உபகரணங்கள் சரியான பராமரிப்பு இல்லாமல் பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் இந்நகராட்சி பொதுமக்களிடமிருந்து எரிவாயு தகன மேடை தொடர்பாக தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. மேலும் தற்போது கொரோனா தொற்றினால் உயிரிழந்த உடல்களை உரிய நேரத்தில் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போது கோவிட்–19 முழு ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரிட இயலாத காரணத்தினாலும், கொரோன தொற்று பரவுதல் காரணமாக கால அவகாசம் போதுமானதாக இல்லாமல் இருந்த நிலையில் மேற்படி, பழுதடைந்த புகைபோக்கிகள் மற்றும் இதர உபகரணங்கள் பழுது நீக்கம் செய்யும் பணியை மேற்கொண்ட SANTHOSH CHARITABLE TRUST, No 16G Pidarikulam Road, Kumbakonam என்ற நிறுவனம் தனது விண்ணப்பம் நாள் 25.06.2021 தகனமேடையினை பராமரிப்பு மேற்கொள்ளவும், எரியூட்டுவதற்கு ஒரு சடலத்திற்கு ரூ.3500/– | **தீர்மான எண்.1065**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றுக்கொண்டு அதில் ரூ.300/— நகராட்சியில் செலுத்திவும் சம்மதம் தெரிவித்தும், மேலும் நகராட்சியின் நிபந்தனைக்குட்பட்டு 2021 ஜூலை 1—ம் தேதி முதல் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்க கோரப்பட்டது.

மேலும் பரிசீலனை செய்யப்பட்டதில் பொதுமக்களின் நலனை முன்னிட்டு ஒரு சடலம் எரியூட்டுவதற்கு ரூ.3000/— பெற்றுக்கொள்ளவும் அதில் சடலம் ஒன்றுக்கு ரூ.250/— நகராட்சியின் கருவூலத்தில் செலுத்திடவும் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு உரிமம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**நிபந்தனைகள்**

1. தகன மயானக் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்த காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோதமான நிகழ்ச்சிகளும் அங்கு நடை பெற அனுமதிக்க இயலாது.
2. இறப்பு விவரங்களை பதிவேடுகளிலும், கணிணியில் பதிவு செய்து அதன் விவரத்தினை உரிமம்தாரர் நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும் இறப்பு விவரங்களை பதிவு செய்ய உரிய படிவங்கள் வழங்கப்பட வேண்டும்.
3. நவீன எரிவாயு கட்டிடத்தில் இந்நகராட்சியால் பொருத்தப்பட்டுள்ள CCTV Camera மற்றும் கணிணி உபகரணங்களை முறையாக பராமரித்து இயக்கி அதன் பதிவுகளை நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
4. ஒலி, ஒளி பெருக்கிகளை பயன்படுத்த கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி ஆணையர், அவ்வப்போது விதிக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும், இதர விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
5. மேற்படி இடத்தில் உள்ள பொருள்கள் களவாடப்பட்டாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விலைவிக்கப்பட்டாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழு பொறுப்பாகும்.
6. எரியூட்டும் இயந்திர புகைபோக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையில் தக்க உயரத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைப்படி பராமரிக்கப்பட வேண்டும்.
7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி தேவைப்படும் என கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்று நகராட்சி மூலம் தனது சொந்த பொறுப்பில் பெற்று கொள்ள வேண்டும்.
8. தகன மேடை கட்டிடத்திற்கு உண்டான மின் கட்டணத்தினை நகராட்சி மூலம் செலுத்தப்பட வேண்டும். மின் இணைப்பு நகராட்சி ஆணையர் பெயரிலேயே இருக்கவேண்டும்.
9. நவீன மயானத்தை பயன்படுத்துபவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு பின்பு மன்ற தலைவர்/ஆணையாளர், நகராட்சி பொறியாளர், சுகாதாரப்பிரிவு அலுவலர் தங்களது அமைப்பை சார்ந்த ஒருவர் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்க வேண்டும். இக்கட்டணம் இலாப நோக்கமின்றி செலவுகளை சரிகட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

10. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொதுவான எரிவாயு தகன மேடை மயானமாக பயன்படுத்த வேண்டும்.
11. தகன மேடை மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல் , செடி, மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி பராமரித்தல் சொந்த பொறுப்பில் ஏற்க வேண்டும்.
12. தகனமேடை மயானத்தில் தங்கள் நிறுவனம் மூலமாக எவ்வித கூரைவேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீ பற்றக்கூடிய பொருள்கள் கொண்டு கூரையோ கண்டிப்பாக அமைக்கக்கூடாது.
13. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்ட பிரச்சனைகளுக்கு சம்மந்த பட்ட நபர்களும் SANTHOSH CHARITABLE TRUST பொறுப்பேற்க வேண்டும்.
14. முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். நீட்டிப்பு தேவைப்படின் 6 மாத காலத்திற்கு முன்பாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
15. நவீன எரிவாயு தகன மயானத்தை பராமரிப்பு பணிகளை கண்காணிக்க நிர்வாகிக்க கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்டு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | மயிலாடுதுறை | தலைவர் |
| நகர் நல அலவலர் | மயிலாடுதுறை | துணைத்தலைவர் |
| நகராட்சி பொறியாளர் | மயிலாடுதுறை | செயலாளர் |
| துப்புரவு ஆய்வாளர்–1 | மயிலாடுதுறை | உறுப்பினர் |
| துப்புரவு ஆய்வாளர் –2 | மயிலாடுதுறை | உறுப்பினர் |
| நகரமைப்பு அலுவளர் | மயிலாடுதுறை | உறுப்பினர் |

16. பராமரிப்பு அனுமதியை புதிப்பிப்பதும் மறுப்பதும் நகராட்சியின் முடிவை பொறுத்து அனுமதி மறுக்கப்பட்டால் தாங்கள் நிறுவிய அசையா அனைத்து கூடுதல் உபகரணங்கள் கட்டிடங்களுக்கும் எந்தவித இழப்பும் நேராமல் பணி அனுமதி முடிவுற்ற பிறகு திரும்பி ஒப்படைக்கும் போது எவ்வித இழப்பீடும் நகராட்சி வழங்காது.
17. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டணம் ஏதும் தேவைப்படின் நகராட்சி அனுமதி பெற்ற வேலைகள் மட்டுமே செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிவுற்ற பிறகு திரும்பி ஒப்படைக்கும் போது இதற்கு எவ்வித இழப்பீடும் நகராட்சி வழங்காது.
18. பராமரிப்பு பணிகளை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு 6 மாத காலத்திற்கு முன்பே நகராட்சிக்கு சரியான காரணத்துடன் கடிதம் மூலம் வழங்க வேண்டும்.
19. நகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப ஒப்படைக்க கோரினாலோ எந்த விதமான ஆட்சேபனை இன்றியும் எந்த விதமான நஷ்ட ஈடு தொகை கோராமலும் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.
20. தகன மேடை மயான பராமரிப்பு உரிமம் பெற்ற தங்கள் அமைப்பு இறந்தவரின் பெயர், தகப்பனார்/ தாயார் பெயர், வயது, முகவரி எரிவாயு மேடையில் எரியூட்டப்பட்ட நாள், பெறப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அடங்கி பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.
21. எரியூட்டு மயான பராமரிப்பு பணிகள் கண்காணிக்கும் குழு நிர்ணயிக்கும் தொகையை

| | | | |
|---|---|---|---|
| | | எரியூட்டப்படும் சடலத்திற்கு கட்டணமாக வசூலிக்க வேண்டும். மின் கட்டணம் மற்றும் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றிற்காக நகராட்சிக்கு ஆகும் செலவு கூடுதலாகும் பட்சத்தில் நகராட்சியும் எரியூட்டு எரிவாயு மயான டிரஸ்ட்டும் சேர்ந்து நகராட்சி நிதி நிலை பாதிக்காத வகையில் மேற்படி கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.<br>22. எரிவாயு மூலம் எரியூட்டப்படும் ஒரு சடலத்திற்கு தங்கள் அமைப்பினால் வசூலிக்கப்படும் தொகையில், ரூ.250/– நகராட்சிக்குரிய கட்டணமாக பிரதி திங்கள் கிழமை தோறும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் விவரத்தை நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்யப்படும்.<br>23. பராமரிப்பு காலத்தில் கணக்குகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் தணிக்கை பட்டய கணக்காளர் (சார்ட்டாடு அக்கவுண்ட்ன்ட்) மூலம் தணிக்கை செய்ய வேண்டும்.<br>24. மாத வாடகை , முன்பணம் ஏதும் செலுத்த வேண்டியது இல்லை.<br>25. மேற்கண்ட நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையானது மீறப்பட்டலோ அல்லது புகார்கள் நிருபிக்கப்பட்டாலோ வழங்கப்பட்ட உரிமம் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும். நஷ்ட ஈடும் கோராமல் தகன மேடையை இயக்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க கட்டுப்பட வேண்டும்.<br>26. இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தங்களது பராமரிப்பு இயக்கத்தில் திருப்தி இல்லை எனில் நகராட்சி நிர்வாகம் கருதினால் எவ்வித அறிவிப்பும் இன்றி இவ்வுத்தரவு ரத்து செய்யப்படும்.<br>27. நகராட்சி மயானம் மற்றும் எரிவாயு தகன மேடைக்கு வருகின்ற நகராட்சிக்குட்பட்ட ஆதரவற்ற சடலங்கள் /கொரோனா 19 தொற்றால் இறந்த அனாதை சடலத்திற்கு கட்டணமில்லாமல் சேவை புரிதல் வேண்டும்.<br>அலுவலக குறிப்பு<br>1. 2021 ஜீலை 1ம் தேதி முதல் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கலாம்.<br>2. எரிவாயு தகன மேடையின் பயன்பாட்டின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும் நகர மக்களின் நலனை முன்னிட்டும், மேற்கண்ட நிபந்தனைகளுடன் தகன மேடையை பராமரிப்பதற்கு M/S SANTHOSH CHARITABLE TRUST, No 16G Pidarikulam Road, Kumbakonam என்ற நிறுவனம் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.12072/2007/இ1 | |

<table>
<tr><td rowspan="2">30.06.2021</td><td>

**2)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **04.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

</td><td rowspan="2">

**தீர்மான எண்.1066**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

</td></tr>
<tr><td>

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | பாதாள சாக்கடை திட்ட பணி – திருவாரூர் சாலை, பூம்புகார் சாலை, சீர்காழி சாலை ஆள்நுழைவு தொட்டி உயர்த்தும் பணி. | 4,60,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. **383315.31** (-) 0.03% குறைவு | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. **384344.11** (+)0.24% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 1964/2021/இ1

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.06.2021 | 3) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 09.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.1067**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | EHD 35 மேன்ஹோல் முடி மற்றும் கவர் வாங்கும் பணி. | 4,20,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 350266.00 (-) 0.04% குறைவு | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. 351790.00 (+)0.40% அதிகம் | |

அலுவலககுறிப்பு:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 1965/2021/இ1

**30.06.2021**

**4)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **09.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணி - கால் டாக்சி, பூம்புகார் ரோடு (RTO office), பெரியகடைவீதி, மற்றும் ரேவதி நகர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட குழாய் உடைப்பினை சீர் செய்யும் பணி. | 5,00,000/- | திரு.G.உத்திரா பதி, மயிலாடுதுறை. | ரூ. **434116.55** (-) 0.14% குறைவு | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசி ராணி, மயிலாடுதுறை. | ரூ. **438198.55** (+)0.80% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2074/2021/இ1

**தீர்மான எண்.1068**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**30.06.2021**

**5)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **04.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | கழிவுநீர் உந்து நிலையம் எண்.4 அய்யாரப்பர் தெருவில் உடைந்த கழிவுநீர் பிரதான குழாயினை மாற்றும் பணி. | 10,00,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 923981.80 (+) 4.93% அதிகம் | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. 993225.80 (+)12.79% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2071/2021/இ1

**தீர்மான எண்.1069**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **6)** மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை பராமரிப்பு பணி – சீர்காழி ரோட்டிலுள்ள 7 HP Kishor motor – லிப்டிங் மேன்ஹோலில் இயங்கி கொண்டு இருந்து வந்தது. தற்போது மின்சாரம் உயர்அழுத்த காரணமாக பழுதாகி விட்டது. மேலும் கருப்பண்ணசாமி கோவில் லிப்டிங் மேன்ஹோலில் 4 HP Kishor motor இயங்கி வந்தது. தற்போது அந்த மின் மோட்டார் பழுதுகிவிட்டது. அதன் தொடர்ச்சியாக சந்திரிக்குளம் lifing manhole motor-ம் பழுதாகிவிட்டது. தற்போது மேற்கண்ட மூன்று இடங்களிலும் உள்ள மின் மோட்டார் பழுது நீக்கம் செய்து உடனடியாக பொருத்தப்படவில்லை எனில் தெருக்களில் வழிந்தோடும் அபாய நிலை ஏற்படும். பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாவார்கள். ஆகவே 7 HP -1No, 4HP-1No, 2HP-1No இந்த மூன்று மின்மோட்டார்களையும் உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்கு Kishor கம்பெனிக்கு கொரோனா ஊரடங்கு காரணமாக அனுப்ப இயலாத நிலை உள்ளது. ஆகவே இம்மூன்று மின் மோட்டார்களையும் உடன் சீர் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.1,42,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2439/2021/இ1 | தீர்மான எண்.1070<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **7)** மயிலாடுதுறை நகராட்சி – பாதாள சாக்கடை பராமரிப்பு பணி – PS.2 கழிவு நீரேற்று நிலையத்திலுள்ள Kishor Pump with motor மின் உயர் அழுத்த காரணமாக அந்நிலையத்திலுள்ள இரண்டு மின் மோட்டார்களும் பழுதாகிவிட்டது. அதன் தொடர்ச்சியாக அதனை உடனடியாக பழுது நீக்கம் செய்து மீண்டும் இயக்கினால் தான் பாதாள சாக்கடை கழிவுநீர் தெருக்களில் வழிந்தோடுவதை தடுக்க இயலும். ஆகவே கொரோனா ஊரடங்கு காரணமாக சென்னை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு எடுத்து செல்ல இயலாத நிலை உள்ளது. ஆகவே அவசியம் கருதி பழுதான PS.2-10 HP motor-1No, PS.2-20HP-1No ஆகிய இரண்டு மின் மோட்டார்களையும் சீர் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.1,50,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2440/2021/இ1 | தீர்மான எண்.1071<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

30.06.2021

8) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 04.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | கழிவுநீர் உந்து நிலையம் எண்.4 ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அருகில் உடைந்த கழிவுநீர் பிரதான குழாயினை மாற்றும் பணி. | 10,00,000/- | திரு.G.உத்தி ராபதி, மயிலாடுதுறை. | ரூ. 863094.40 (+) 4.94% அதிகம் | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசி ராணி, மயிலாடுதுறை. | ரூ. 931443.80 (+)13.25% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2073/2021/இ1

**தீர்மான எண்.1072**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **9)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **11.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.1073**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| **வ எ ண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்த மதிப்பு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்** | **மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - Inlet Pondல் நிரம்பியுள்ள கசடுமண்ணை அகற்ற HITACHI/CHAIN DOZZER-ஐ வாடகைக்கு பயன்படுத்தி கொள்ளும் பணி. | 10,00,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 855775.00 (-) 0.08% குறைவு | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. 858275.00 (+) 0.21% அதிகம் | |
| 2. | பாதாள சாக்கடை பராமரிப்பு பணி – கண்ணாரத்தெரு, Back bone Sewer- I முதல் கழிவுநீர் உந்து நிலையம் எண்.4 வரை ஏற்பட்டுள்ள கசிவு/உடைப்புகளை சீர்செய்யும் பணி. | 8.25,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 631464.96 (+) 4.95% அதிகம் | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. 634053.20 (+) 5.38% அதிகம் | |

<u>அலுவலகக்குறிப்பு</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| | 3. வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு கூடுதலாக கொடுத்துள்ள தொகையினை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.** 7724/99/இ1 | |

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **10)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட **09.06.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.1074**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| **வ எ ண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்த மதிப்பு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்** | **மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பாதாள சாக்கடை திட்ட நிதி | | | | | |
| 1. | கண்ணார தெரு (ஜெனிபர் சுவிட் ஸ்டால்) - **600** mm dia DI pipe வாங்குதல் மற்றும் வாடகை அடிப்படையில் ஆயில் எஞ்சின் எடுத்து கொள்ளும் பணி. | 5,00,000/- | திரு.G.உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 440022.00 (+) 4.97% அதிகம் | திரு. G.உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை. | ரூ. 467473.00 (+) 11.52% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: **6**ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2072/2021/இ1

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **11)** மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சி கூறைநாடு – ஆரோக்கியநாதபுரம் கிழக்கு தெரு மற்றும் ஆரோக்கியநாதபுரம் மேற்கு தெரு, முழுவதும் குடிசைப்பகுதியாகும் (Notified Slum) அப்பகுதியில் பொது மக்கள் பயன்படுத்தும் சாலை மிகவும் பழுதுடைந்த நிலையில் உள்ளதால், அப்பகுதி மக்களின் நலன் கருதி சாலையினை குடிசை மாற்று வாரியத்தின் குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலையாக அமைத்து தருவதாகவும், சாலைப்பணி முடிவுற்றதும், அச்சாலையினை நகராட்சி எதிர்வரும் காலத்தில் பராமரிக்கவும் ஒப்புதல் கோரி உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்களின் ந.க.எண்.036/AEE/TNSCB/CUD/2021 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை TNSCB துறையினர் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சாலைப்பணி முடிவுற்றதும் எதிர்வரும் காலங்களில், நகராட்சி அச்சாலையினை பராமரிக்கவும் செய்யலாம்.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 0046/2021/இ1** | **தீர்மான எண்.1075**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **30.06.2021** | 12) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா பெரும் தொற்று இரண்டாம் அலை தொடர்ந்து அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில் நகராட்சி பகுதிகளில் தொடர்ந்து தினந்தோறும் PTPCR முகாம்கள்11.05.2021 முதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி முகாம் நடத்திடுவதற்கு சேர், சிற்றுண்டி, முகாம் நடத்தும் மருத்துவர்கள், முன்களபணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி முகாம்களுக்கு வாடகை சேர் மற்றும் சிற்றுண்டி செலவுத்தொகை ரூ.21320/– + ரூ.11480/- ஆகக்கூடுதல் ரூ.32800/- நகராட்சி துப்புரவு ஆய்வர் திரு.என்.பிச்சைமுத்து அவர்களால் செலவு செய்யப்பட்டு உள்ளதாக தெரிவித்து அதற்கான பட்டியல்களை இணைத்து உள்ளார். நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு நடவ்டிக்கையின்கீழ் பொதுமக்களிடையே நோய் கண்டறிய முகாம்கள் நடத்த வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி திரு.என்.பிச்சைமுத்து, துப்புரவு ஆய்வரால் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.32800/-ஐ தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றும் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1302/2020/எச்1 | **தீர்மான எண்.1076**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.06.2021** | 13) மயிலாடுதுறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குப்பைகள் மற்றும் வணிக வளாகங்களில் தினசரி சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் மக்காத என வகைப்படுத்தி குப்பைகளை வாங்கிடுவதற்கு நகராட்சியில் உள்ள தூய்மை பணியாளர்களின் தற்போது பணி ஒய்வு பணி மாறுதல் பணியிடை இறப்பு போன்ற காரணங்களால் தற்போது 125 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகின்றார்கள். இதில் நகராட்சியின் அத்தியாவசிய பணிகளான மின் விளக்கு பராமரிப்பு, பாதாளசாக்கடை பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு என 30 பணியாளர்கள் பணிபுரிந்துகின்றனர்கள் உள்ள பணியாளர்களில் மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு போன்ற காரணங்களினால் தினசரி 20 பணியாளர்கள் மேல் பணிக்கு வரஇயலாத நிலை உள்ளது.<br>நகரட்சியில் தற்போது உள்ள தூய்மை பணியாளர்கள் கொண்டு நகரில் உள்ள குப்பைகள் பிரித்து வாங்க இயலாத நிலையின் காரணமாக நகர்பகுதிகளில் ஆங்காங்கே குப்பைகள் தேங்கி நிலையில் உள்ளது. மேலும் மயிலாடுதுறை தற்போது மாவட்ட தலைநகரமான உள்ளதால் மாவட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஆய்வுக்காக மாதந்தோறும் வருகை தந்தவாறு உள்ளார்கள்.<br>எனவே நகராட்சியில் தற்போது தேங்கி உள்ள குப்பைகளை அகற்றிடுவதற்காக தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு மட்டும் மாவட்ட ஆட்சியரின் தினசரி ஊதியத்தில் தூய்மை பணியாளர்கள் 25 நபர்கள் பணியமர்த்தி தேங்கி உள்ள குப்பைகளை அகற்றிடுவதற்காக ஒரு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவின் ரூ.3,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி நகரின் முக்கிய சாலைகளில் குப்பைகள் தேங்காமல் முழுவதும் அகற்றிடும் பணியினை விரைவாக செய்த முடிக்கவேண்டியுள்ளதால் தற்காலிக தூய்மை பணியாளர்கள் 25 நபர்கள் பணியமர்த்தி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையினை அங்கீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.1302/2020/எச்1 | தீர்மான எண்.1077<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **30.06.2021** | 14) இந்நகராட்சியில் தபால் பிரிவில் உள்ளுர் மற்றும் வெளியூர் தபால்களை தபால் துறை மூலம் அனுப்ப வேண்யதன் அவசியத்தை கருதியும் . நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் இதர அரத் துறைகளுக்கு அவசர அவசியம் கருதி தால்கள் அப்ப வேண்டியுள்ளதால் 2021–2022–ம் ஆண்டிற்கு அஞ்சல் வில்லைகள் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி செலவினத்தில் இருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:3222/2018/டி1 | தீர்மான எண்.1078<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.06.2021 | 15) மயிலாடுதுறை நகராட்சியில் துாய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ரவிச்சந்திரன், த/பெ.வீரப்பன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2021 அன்று ஒய்வு பெற்றுவிட்டப்படியால் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா ( ரூ.2960/- ) மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2045/2021/பி2** | **தீர்மான எண்.1079**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | 16) மயிலாடுதுறை நகராட்சியில் தோட்டக்காரராக பணிபுரிந்து வந்த திரு.எம்.மதியழகன் என்பவர் 30.06.2021 அன்று ஒய்வு பெற்று உள்ளதால் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா (2960 + 15368) அதற்குண்டான வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.18328/- மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2090/2021/பி2** | **தீர்மான எண்.1080**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | 17) மயிலாடுதுறை நகராட்சியில் துாய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி.ராஜேஸ்வரி, க/பெ.முத்துசாமி என்பவர் 30.06.2021 அன்று ஒய்வு பெற்று உள்ளதால் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா (2960 + 36547) அதற்குண்டான வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.39507/- மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2160/2021/பி2** | **தீர்மான எண்.1081**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | 18) மயிலாடுதுறை நகராட்சியில் துாய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ராஜேந்திரன், த/பெ.மாரியப்பன் என்பவர் 30.06.2021 அன்று ஒய்வு பெற்று உள்ளதால் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா (2960 + 16934) அதற்குண்டான வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.19894/- மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.10,000/—ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2157/2021/பி2** | **தீர்மான எண்.1082**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **19)** மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.பழனி, த/பெ.வையாபுரி என்பவர் **30.06.2021** அன்று ஒய்வு பெற்று உள்ளதால் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா **(2960** + **36547)** அதற்குண்டான வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.**39507/-** மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.**10,000/–**ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2251/2021/பி2 | **தீர்மான எண்.1083**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **30.06.2021** | **20)** இந்நகராட்சியில் வருவாய் அலுவலராக பணிபுரிந்து கும்பகோணம் நகராட்சியில் ஓய்வுபெற்ற திரு.ஏ.கே.ஈஸ்வரப்பன், என்பவருக்கு காலதாமதமாக வழங்கப்பட்ட ஓய்வூதிய தொகுப்பு தொகை (Commutation of pension) ரூ.**2,03,343/–**க்கு **6%** சதவீதம் வட்டியை **30.06.2001** முதல் **03.02.2006** வரை கணக்கீட்டு அத்தொகையினை **3** மாத காலகெடுவிற்குள் வழங்கிட மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பு ஆணை W.P.No.11937/2010, நாள் **09.12.2020**ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இணை இயக்குநர் (தேர்தல்), நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**29440/2010**/பி2 நாள் **10.03.2021.** கடிதத்தில் ஓய்வூதிய தொகுப்பு தொகைக்கு வட்டி வழங்க விதிகளில் வழிவகை இல்லை என்பதால் சட்ட ஆலோசனை பெற்று, மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், காலநிர்ணயம் செய்யப்பட்ட உயர்நீதிமன்ற ஆணை என்பதால் காலதாமதத்தை தவிர்க்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஆஜரான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ் அவர்களின் ஆலோசனை கோரப்பட்டதில், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ், அவர்களால் தனது **15.03.2021**ம் தேதிய கடிதத்தில், மேற்படி வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம் என சட்ட கருத்து வழங்கப்பட்டது இதன் அடிப்படையில், இவ்வழக்கினை மேல்முறையீடு செய்திட உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், அன்னார் தனது **27.03.2021**ம் தேதிய கடிதத்தில் இவ்வழக்கினை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**25000/–** வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுறது.<br><br>**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.**அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வழக்கிற்கான தொகை ரூ.**25000/–** வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.14126/2009/பி3 | **தீர்மான எண்.1084**<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **30.06.2021** | **21)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை , மக்காத குப்பை என பிரித்து வாங்குவதை நகராட்சியில் உள்ள மூன்று சக்கர மீதிவண்டிகள் பழுதுகள் எற்பட்டு இயங்க இயலாத நிலையில் உள்ளது. நகராட்சியில் தற்போது குப்பைகள் வாங்க இலாத நிலை எற்பட்டுள்ளது. பொது சுகாதார பணி அவரச அவசியம் கருதி உள்ளூர் உள்ள பழுது நக்கம் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பத்ரகாளிம்மன் டிங்கர் பாடி லேபர் ஒர்க்ஸ்,பேச்சாடி, மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் குறைவாக உள்ளதை எற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவுத்தெகை ரூ. **11700/–** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி **15–**படி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்: 1942/2021/எச்1** | **தீர்மான எண்.1085**<br><br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.06.2021</td>
<td>
22) மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 17.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ எண்</th><th>வேலையின் விபரம்</th><th>ஒப்பந்த மதிப்பு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரார்கள் பெயர்</th><th>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர்</th></tr>
<tr><td colspan="6">பொது நிதி</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">நவீன எரிவாயு தகன மேடையை LPG Gas மூலம் இயக்கும் பணி.</td><td rowspan="2">10,00,000/-</td><td>SANTHOSH CHARITABLE TRUST, KUMBAKONAM - 612 001.</td><td>ரூ.842475.00 (-) 0.10% குறைவு</td><td rowspan="2">SANTHOSH CHARITABLE TRUST, KUMBAKONAM - 612 001.</td></tr>
<tr><td>Praying Hands Charitable Trust, Kumbakonam - 612 001.</td><td>ரூ.871500.00 (+) 3.34% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2152/2021/இ1
</td>
<td>
**தீர்மான எண்.1086**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
</table>

**30.06.2021**

23) மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 17.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **வேலையின் விவரம்** | **ஒப்பந்த மதிப்பு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தார்கள் பெயர்** | **மதிப்பீட்டைடவிட குறைவு/ மதிப்பீட்டைடவிட அதிகம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தார் பெயர்** |
|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | |
| 1. | நவீன எரிவாயு தகன மேடையில் புதியதாக Chimney பொருத்தும் பணி. | 10,00,000/- | SANTHOSH CHARITABLE TRUST, KUMBAKONAM - 612 001. | **ரூ.849000.00** (-) 0.12% குறைவு | SANTHOSH CHARITABLE TRUST, KUMBAKONAM - 612 001. |
| | | | Praying Hands Charitable Trust, Kumbakonam - 612 001. | **ரூ.851500.00** (+) 0.18% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.** 2153/2021/இ1

**தீர்மான எண்.1087**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30.06.2021 | 24) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.9ல் அமைந்துள்ள அரசு பெரியார் மருத்துவமனை வளாகத்தில் (DAY-NULM) திட்டத்தில் ரூ.72.00 இலட்சம் (ரூபாய் எழுபத்தி இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் உட்புற நோயாளிகளுடன் தங்குவோர் தங்கும் கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறைகள் ந.க.எண்.38033/2013/யுபிஏ2-1, நாள்:25.02.2021ல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டை மூலம் மண் பரிசோதனை மேற்கொண்டதற்கான பட்டியல் தொகை ரூ.76,700/-ஐ உடன் வழங்கிட கோரி University College of Engineering, பட்டுக்கோட்டை அவர்களது கடிதத்தில் கோரியுள்ளார்கள். எனவே பட்டியல் தொகை ரூ.76,700/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 0531/2021/இ1 | தீர்மான எண்.1088<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | 25) மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி நகரில் 36 வார்டுகளிலும் வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு என இரண்டு குழுக்கள் மூலம் 60 DBC பணியாளர்கள் பணிப்புரிந்து வருகின்றனர். மேற்படி இரண்டு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவு ஜுன் 2021 அன்றுடன் முடிவடையவுள்ளது. அடுத்து வரும் கோடை காலத்தில் பொதுமக்கள் தங்களது தேவைக்காக தண்ணீர் சேமிப்பதன் மூலம் டெங்கு கொசு புழு உற்பத்தியாக வாய்ப்பு உள்ளது. எனவே ஏற்கனவே பணிபுரியும் மேற்படி இரண்டு மகளிர் குழுக்கள் மூலம் 60 பணியாளர்கள் மட்டும் ஜுலை 2021 முதல் டிசம்பர் 2021 வரை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.40,00000/- (ரூபாய் நாற்பது லட்சத்து மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: நகராட்சியில் டெங்கு நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து பணியாளர்கள் பணிபுரிய வேண்டியுள்ளதால் ஏற்கனவே நோய் தடுப்பு நடவடிக்கைகளில் பணிபுரிந்த 1.சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு, 2.வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழுவிலிருந்து ஒரு குழுவிற்கு 30 நபர்கள் வீதம் 60 நபர்களை 01.07.2021 முதல் 31.12.2021 வரையில் பணிபுரிவதற்கு அனுமதி அளிக்கலாம்.<br><br>ந.க.எண்.2478/2020/எச்1 | தீர்மான எண்.1089<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |